
# திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்.



# பேசுகிறார்!

## “வெங்காயக் காங்கிரஸ்”

**கற்பனை!**

பெரியாரின் நண்பர்: வணக்கங்க அய்யா! அம்மா வணக்கம்!

பெரியார் : வாங்க வாங்க! ஈரோடிலிருந்து வர்ரீங்களா?

பெ. நண் : ஆமாங்கய்யா.

பெரி : என்ன விசேஷங்க, ஏதாவது சொந்த காரியமா அல்லது ... ...

பெ. நண் : சொந்த காரியம்னு ஒன்றுமில்லேங்கய்யா! தங்களைச் சந்திச்சிட்டு அப்படியே ஏதாவது அரசியல் விஷயம் தெரிஞ்சிக்கலாம்னு வந்தேனுங்க.

பெரி : சாப்பாடு ஆயிட்டுதுங்களா!

பெ. நண் : மணி நாலடிக்கப் போவுது. சாப்பிட்டாச்சுங்களே! டீ வேனும்னு சாப்பிட்றேன்.

பெரி : அம்மா மணி, எனக்கும் அய்யாவுக்கும் டீ கொண்டாரச் சொல்லம்மா.

பெ. நண் : ஏதோ போராட்டம் ஆரம்பிக்கப் போறதாக அய்யா சொன்னதாக பேப்பர்காரன் போட்டிருந்தான். உண்மைதானுங்களாய்யா!

பெரி : அதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் முடிவு எடுக்கல்லே!

பெ. நண் : தி. மு. க. போராட்டம் இன்னும் தொடர்ந்து நடத்துருங்களே, அது எப்போதுங்கய்யா முடியும்.

பெரி : அந்த கண்ணீர்த்துளிப் பசங்க ஒரு வருஷத்துக்குன்னு போராட்டம் திட்டம் போட்டு ஏதோ 5 மாசம் ஆச்சுபோலியிருக்குது! இன்னும 7 மாசம் நடத்தப்போருனுங்க!

பெ. நண்: அது முடிந்து பிறகுதான் நம்ம போராட்டமா?!

பெ : கண்ணீர்த்துளிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கு. அவங்க நடத்தற போராட்டம் காமராசரை காலை வாரி விட்றதுக்கு! நாம் நடத்தப்போகிற போராட்டம் அவர் கையை வலுப்படுத்தறதுக்கு.

பெ. நண்: அய்யா அவுங்க நாலு நாட்களுக்கு முன்னே, இந்த காங்கிரஸ்காரனுங்க நன்றிகெட்டவங்க; வரவர நம்மை மதிக்கிறதேயில்லை. 1967 தேர்தலிலே காங்கிரசு அடியோடு தோல்வியடைந்தாகூட ஆச்சர்யப்படுவதற்கில்ல. என்ன காங்கிரஸ்—வெங்காய காங்கிரஸ்—அப்படின்னு காரசாரமாபேசியிருக்கிறீங்களேய்யா!

பெரி : ஆமாங்க-கொஞ்ச வேகமாகத்தான் பேசினேன். நமக்குள்ளே உண்மையைப் பேசிக்கிறத்துக்கு என்னங்க வெட்கம்! பாருங்கோ, காங்கிரஸ்காரனுங்க எவனாவது கண்ணீர்த்துளிப்பசங்களுக்கு சரியா பதில் கொடுக்கிறமாதிரி திட்டவட்டமா, புள்ளிவிவரமா பேசரானுங்களா — இல்லையே, நீ லாரி பேரத்திலே ஊழல் பண்ணிட்டே, அந்த பேரத்திலே கையை நீட்டிட்டே, உனக்கு எத்தனை பெண்டாட்டி, எனக்கு எத்தனைவீடு, உனக்கு முன்பு என்ன சொத்து எனக்கு என்ன வாழ்வு என்று இப்படி ஆபாசமா பேசிப்பேசி மேடையையே அசிங்கப்படுத்தி அவனுங்களுக்கு ஜனங்ககிட்டே அனுதாபம் ஏற்பட்ர மாதிரி செய்து கார்பொரேஷன் தேர்தல்லே கோட்டை விட்டானுங்களே காங்கிரஸ்காரனுங்க!

பெ. நண் : அப்ப காங்கிரஸ்காரர்கள், தி. மு. கழகத்துக்காரர்கள்பற்றி சொன்னதெல்லாம் உண்மையா பொய்யாங்க அய்யா!

பெரி: உண்மையோ-பொய்யோ அந்த ஆராய்ச்சிக்கே நான் போகலிங்க, ஏன்னு கோர்ட்லே கேசு நடக்குது! அதுபற்றி நம்ம விரிவா பேசக்கூடாது. நான் சொல்றது எதுக்கு தெரியுமோ, கண்ணீர்த்துளி பசங்களை இந்த மாதிரி பேசற மற்றவனுங்க மட்டும் யோக்கியர்களான்னு ஊருக்குத்தெரியாதா—அதைப்பற்றி பேசமாட்டார்களா?

பெ. நண் : நீங்களே கழகத்துக்காரர்களைத் தீவிரமாகத் தாக்கிப் பேசி வருகிறீர்களே, எல்லாம் என்கிட்டே ஐந்து ரூபாய் பத்து ரூபாய், ஐம்பது ரூபாய் சம்பளத்திற்கு இருந்தவனுங்க, பொறுக்கித்தின்பவனுங்க அப்படின்னு கேலி செய்திருக்கிறீங்களே அய்யா!

பெரி: கூட்டத்திலே பேசறது வேறு! நம்ம தனியா பேசறது வேறு! இங்கே கூடவா நம்ம மனசாட்சிக்கு துரோகம் பண்ணனும்? கண்ணீர்த்துளி கட்சிக்காரனுங்களே இல்லேன்னு சொன்னா, இந்த ஆட்சி சிரிப்பாய் சிரிச்சிப் போயிருக்கும். ஏதோ அவனுங்க கொஞ்சம் அது இதுன்னு சத்தம் போட்றதாலேதான், அரசாங்கத்துக்கு பயமிருக்குது!

பெ. நண் : அப்படின்னா நம்ம தம்பி சம்பத்து காங்கிரசை ஆதரிக்குதே!

பெரி ; அவன் கிடக்கிறான்.

பெரி : அவன் கிடக்கிறான். அவன் கண்ணீர்த்துளி கட்சியை விட்டு வெளியேறினதே எனக்கு பிடிக்கலீங்க, நான் அப்பவே சொன்னேன். சம்பத் போட்ற கணக்கு தப்புன்னு! நான் காங்கிரசை ஆதரிக்கிறதைவிடவா நம்ம சம்பத்தாலே காங்கிரசை ஆதரிக்க முடியும். இனி யாரும் காங்கிரசை காப்பாற்ற முடியாதுங்க. அவ்வளவு ஊசலாடிப் போயிட்டுது காங்கிரசு! ஏதோ எனக்கு அந்த அண்ணாதுரை மற்ற பசங்ககிட்ட யிருக்கிற எரிச்சலாலும், காமராசர் தமிழர்கள் சிலருக்கு முக்கிய வேலை கொடுத்தாரேயென்ற நன்றிக்கும் நான் காங்கிரசை ஆதரிக்கிற மாதிரி நாலு வார்த்தையைச் சொல்லிவைக்கிறேனே தவிர, காங்கிரசாவது இனி அதுவாழற

(7-ம் பக்கம் பார்க்க)

28—3—64
8 பக்கங்கள்
வார இதழ்
16 காசு.

# தலையங்கம்

மாலை 17. 28—3—64 மலர். 34

## அண்ணா கருத்துக்கு 'மித்திரன்' ஆதரவு!

—(○—○)—

இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெறும் தேர்தல்களில் மக்கள் அளிக்கின்ற தீர்ப்புக்குச் சரியான பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் பலமுறை எடுத்துக்காட்டி வந்துள்ளது.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு பொதுத் தேர்தல் சமயத்திலும் பல இலட்சக்கணக்கான வாக்குகள் மதிப்பிழந்து போகும் தற்போதைய தேர்தல் முறையைச் சுட்டிக்காட்டிப் பேசி வருவதை அனைவருமே நன்கறிவர்.

ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெறுவதும், அவருக்குக் கிடைக்கின்ற வாக்குகள் மட்டும் மதிக்கப் பெறுவதும், அதே தொகுதியில் போட்டியிட்ட மற்ற வேட்பாளர்களுக்குக் கிடைத்த ஆயிரக்கணக்கான வாக்குகள் மதிப்பிழந்து போகக்கூடிய நிலைமை இருப்பதையும் சுட்டிக்காட்டி, இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள்.

இப்படி மக்கள், வாக்குச் சீட்டுகளின் மூலம் தெரிவிக்கின்ற கருத்துக்களுக்கு, ஒரு தொகுதியில் பெருவாரியான வாக்காளர்களின் கருத்து மதிப்புப் பெறுவதும், சில பல ஓட்டுகள் குறைகின்ற காரணத்தால், அதே தொகுதியின் கணிசமான வாக்காளர்களின் கருத்து மதிப்பற்றுப் போகும் நிலையை மாற்றத்தான், தேர்தல்களை நாடு முழுவதும் கட்சிகளின் அடிப்படையில் நடத்தவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

நாட்டிலே இருக்கின்ற கட்சிகள் அனைத்தும் ஒவ்வொரு தொகுதியிலும் தனித்தனியாக வேட்பாளர்களை நிறுத்தி வைக்காமல் நாடு முழுமையும் எல்லா தொகுதிகளிலும் கட்சி அடிப்படையில் போட்டியிட்டு, அந்தந்த கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் விகிதாசார முறைப்படி சட்டமன்ற, பாராளுமன்ற ஸ்தானங்களை அந்தந்த கட்சிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால், தேர்தல்களில் ஒரு வாக்கு கூட வீணாகும் நிலை ஏற்படாது, எல்லா வாக்காளர்களின் கருத்தும் மதிக்கப் பெறும்.

ஒரு தொகுதியில் வெற்றி பெறும் வேட்பாளர் பெறுகின்ற வாக்குகள், அதே தொகுதியில் போட்டியிட்ட மற்ற வேட்பாளர் பெறும் வாக்குகளை விடக் குறைவாக இருந்தாலும், அவைகள் அந்தந்த கட்சியின் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும்.

சென்ற பொதுத் தேர்தலில் 50 இலட்சம் வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் கட்சி 134 இடங்களையும், 35 இலட்சம் வாக்குகளைப் பெற்ற தி. மு. கழகம் 50 இடங்களையும் பெறுகின்ற ஏற்றத்தாழ்வும் இதனால் ஏற்படாது

இந்தக் கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியாளர்களுக்குப் பன்முறை எடுத்துக் கூறியுள்ளார்.

நாட்டின் மற்ற தலைவர்கள் சிலரும் ஆதரித்துள்ளனர்.

இப்போது "சுதேசமித்திரன்" நாளிதழும் இந்தக் கருத்தை ஆதரித்துத் தலையங்கம் தீட்டியுள்ளது:—

தற்போதைய நிலையில் ஒரு கட்சி பெறும் வாக்குகள் மற்ற கட்சிகளுக்கு மொத்தத்தில் கிடைக்கும் வாக்குகளை விடக் குறைவாக இருந்தபோதிலும் சட்டசபையில் மெஜாரிடி ஸ்தாபனங்கள் பெறக்கூடிய வாய்ப்பு இருந்து வருகிறது. குறிப்பாக இருவருக்கு மேல் ஒரு தொகுதியில் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் மற்றவர்களை விடக் குறைந்த வாக்குகள் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காண்கிறோம். **மொத்தத்தில் மற்ற கட்சிகளைவிட குறைந்த வாக்குகள் பெறும் ஒரு கட்சி சட்டசபையில் மெஜாரிடி ஸ்தானங்களை வகிப்பதென்பது ஜனநாயகத் தத்துவத்திற்கு முற்றிலும் பொருத்தமான தன்று.** ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சட்டசபை ஸ்தானங்களைப் பிரித்துக் கொடுப்பது பகுத்தறிவுக்கு இன்னும் பொருத்தமான ஒரு ஏற்பாடல்லவா, என்பது இந்நாட்டில் ஜனநாயகம் சிறந்த முறையில் செழிப்புற எண்ணுவோரின் கவனத்தைக் கவர வேண்டிய ஒரு பிரச்சினை"

—என்று 25—3—64ந் தேதிய இதழில் "சுதேச மித்திரன்" தலையங்கம் தீட்டியிருப்பதை கவனிக்கவேண்டுகிறோம்.

17 ஆண்டுகளாக நாட்டில் முறைகேடான நிர்வாகம் நடத்தி வரும் காங்கிரஸ் கட்சி, தொடர்ந்து ஆட்சி செலுத்த முடிகிறதென்றால், இலட்சக்கணக்கான வாக்காளர்களின் கருத்து, இப்போதிருக்கும் தேர்தல் முறையினால் மதிப்பிழந்துபோவதுதான் காரணம் என்பதை, ஜனநாயகத்தில் நாட்டம் கொண்ட அனைவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய பிரச்னையாகும்.


ஆளும் கட்சிக்கு இந்த யோசனையைக் கூறவேண்டிய பொறுப்பை, ஜனநாயகம் தழைக்கவேண்டும் என்ற நாட்டம் கொண்ட எல்லா எதிர்க்கட்சிகளும் மேற்கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய இந்தக் கருத்தை, பகுத்தறிவுக்குப் பொருத்தமான ஏற்பாடு என்று காங்கிரசை ஆதரிக்கும் சுதேசமித்திரனே ஆதரிக்கிறது என்றால் மற்றவர்களும் இந்தப் பிரச்னையை நன்குசிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அண்ணா ஒரு கருத்தைச் சொல்கிறார் என்பதற்காகவே அதைக் கண்மூடித்தனமாக எதிர்க்கும் குணம் படைத்த கட்சிகளும் இந்தப் பிரச்னையை நிதானத்துடன் சிந்தித்துப்பார்த்தால், இதனால் அவைகளுக்கும் பலனுண்டென்பதை அவைகள் நன்குணரலாம்!

கட்சி மாச்சரியங்கள் எவ்வளவு இருப்பினும், ஜனநாயகம் தழைத்துவளர, எல்லாக் கட்சிகளுமே இதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியும் தனது சுயநலத்தையேக் கருதாமல், அறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை எடுத்துக்காட்டி, இப்போது "சுதேச மித்திரன்" ஆதரித்து எழுதியுள்ள இப்பிரச்சினையை நன்கு சிந்தித்து ஆவன செய்யவேண்டும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.



**அறிஞர் அண்ணா**

**மற்றும் கழகத் தலைவர்கள் — தோழர்கள்**

**சிறையில் இன்று**

**127-வது நாள்**

# ஆளும் கட்சியினர் தெளிவு பெறுவார்களா ?

கட்சியுடன் கூட்டு சேராது. அப்படிச் சேர்ந்தால் எதிர்க்கட்சி என்ற மரியாதையையும் மதிப்பையும் தானே இழந்துவிட்ட பரிதாபத்திற்கு ஒப்பாகும்.

காங்கிரசுடன் கூட்டு சேர்ந்துள்ளதாகத் தனக்குத்தானே அடிக்கடி விளம்பரம் செய்து கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்டு கட்சி (திரு. காமராசர் அவர்களும் கனம். கக்கன் அவர்களும் கம்யூனிஸ்டு கட்சியை எங்களோடு கூட்டுச் சேர்த்துக் கொள்ளவில்லையென்று பொது மேடைகளிலும், சட்டமன்றத்திலும் கூறியிருக்கிறார்கள்) அந்த கூட்டிலாகிலும் நேர்மையாக நடந்ததாயென்றால் 'இல்லை. சென்னை மாநகரை எடுத்துக் கொண்டால் சில வட்டங்களில் காங்கிரஸ் கட்சியை கம்யூனிஸ்டு கட்சி பகிரங்கமாக தனது வேட்பாளர்களை நிறுத்தி எதிர்த்திருக்கிறது.

நேர்மையான உடன்பாடாயிருந்தால் மேடைகளிலும் பொறுப்புடன் தனது பிரச்சாரத்தை அக் கட்சி செய்திருக்கும். தன் வீட்டு இழவை எண்ணிக்கொண்டு எதிர் வீட்டு இழவில்போய் ஓயாமல் அழுத கதைபோலவே கம்யூனிஸ்டு கட்சியின் இன்றைய தலைமையும், த. தே. க. கட்சியும் கழகத்தின்மீது தனக்குள்ள பொருமை—பொச்சரிப்பு ஆகியவைகளை எண்ணியெண்ணி காங்கிரஸ் மேடைகளில் ஒப்பாரி வைத்து அழுவதைப் போல அழுது தீர்த்திருக்கிறது. அதாவது கழகத் தலைவர்கள் மீதும் தோழர்கள் மீதும் தங்களுக்குள்ள ஆத்திரத்தைக் கொட்டி அளந்திருக்கிறது!

இந்த இரண்டு கட்சிகளும் தான் இந்தப் போக்கில் இருக்கிறதென்றால் காங்கிரஸ் கட்சியுமா அக்கட்சிகளின் ஆசாபாசத்திற்கு இடமளிக்கும் அளவுக்கு சீர்குலைய வேண்டும் என்று கேட்கிறோம். தங்கள் முகாமுக்குப் பிரசங்கிகள் இல்லையென்பதற்காக அதிகப் பிரசங்கிகளை அதிலும் அரசியல் அறத்தை மதிக்காதவர்களைத் தேடுவதின் அபாயத்தை மிக விரைவில் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் அனுபவிக்கத்தான் போகிறார்கள். ஆனாலும் இப்பிரச்சாரத்தினால் கழகத்தின் வளர்ச்சியை அது எதிர்காலத்தில் பெறயிருக்கும் மகத்தான வெற்றிகளைச் சிறிதுகூட அசைத்துவிட முடியாது.

நாம் கவலைப்படுவதெல்லாம், அரசியல் துறையில் எவ்வளவு கடுமையான அபிப்ராய பேதங்களிருப்பினும் அவைகளைத் தீர்த்துக்கொள்வதில் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் அலாதி சிறப்பு பெற்றவை என்ற பெருமைக்கு இன்று தமிழகக் காங்கிரஸ் மூலவர்களே கேடு விளைவிக்க துணைபோகிறார்களே என்ற வருத்தம்தான் !

1937-ம் ஆண்டு டெல்லி சட்டசபைத்தேர்தலுக்கு சென்னை மாநகரில், காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. சத்தியமூர்த்தி அவர்களும், நீதிக்கட்சி சார்பில் சர். எ. இராமசாமி அவர்களும் போட்டியிட்டனர். அன்றைய சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில்கூட, சர். ஏ. இராமசாமி திரு. சத்தியமூர்த்தி ஆகியோரின் தேர்தல் போட்டி முக்கியத்துவம் பெற்றவைகளில் ஒன்றாகயிருந்தது !

நீதிக் கட்சியின் முக்கிய தூணும், காங்கிரஸ் இயக்கத்தின் முக்கிய தூணும் மோதிக் கொள்கின்றன என்றெல்லாம் அரசியல் உலகில் அன்று பேசப்பட்டன. இரு கட்சிகளின் முழு பலமும் பிரயோகப்படுத்தப்பட்டது. ஓயாத பொதுக் கூட்டங்கள், ஆணித்தரமான விவாதங்கள்! தீப்பொறி பறக்கும் பேச்சுக்கள்! இன்னும் சொல்லப்போனால் ஒரே மேடையில் இரு வேட்பாளர்களும் தங்களின் கொள்கைகளை எடுத்துக் கூறி ஆதரவு தேடிய முறைகள் ஏராளம்! ஏராளம்! இரு கட்சிகளின் பெருந் தலைவர்களெல்லாம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அறிஞர் அண்ணா, மறைந்த ஆங்கிலப் பேராசிரியர் வரதராசன் போன்றவர்கள் முன்னணியில் நின்று நீதிக்கட்சிக்காக அரும்பாடு பட்டார்கள்.

அத் தேர்தலின்போது இரு வேட்பாளர்களும் வீடுவீடாகச் சென்று வாக்குகள் கேட்டுவந்தனர். அப்போது சென்னை பெத்து நாயகன் பேட்டை வெங்கைய்யர் வீதியில் இரு சார்பினரும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. சர். எ. இராமசாமி அவர்களைக் கண்டதும் திரு. சத்தியமூர்த்தி அவரைக் கைகுலுக்கி, என்ன இராமசாமி, தேர்தல் காய்ச்சல் எத்தனை டிகிரி என்று கேட்டார். உடனே சர். இராமசாமி அவர்கள், உனக்கு உள்ள டிகிரியை முதலில் சொல்லு என்று கேட்டார். இருவரும் அளவளாவினார்கள். அதுபோலவே இரு சார்புத் தோழர்களும் தோழமை காட்டிக் கொண்டனர். தொடர்ந்து வீடு வீடாகச் சென்று தங்கள் கட்சிக்கான ஆதரவைத் திரட்டினர். தேர்தல் போட்டியில் எவ்வளவு தீவிரமும் தூய்மையும் இருந்ததோ அதுபோலவே நட்புரிமையிலும் தூய்மை காப்பாற்றப்பட்டது. அன்றைய அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் நீதிமன்றத்தில் இருசார்பு வழக்குரைஞர்கள் வழக்குகளை எடுத்துக்காட்டி கடுமையாக வாதிட்டாலும், வழக்கு முடிந்து வெளியே வந்ததும் மனிதாபிமானத்துடன் தோழமையுடன் பழகுவதைப் போலவே அரசியல் துறையின் தரத்தைக் கடைப்பிடித்து வந்தனர். அவ்வித அரசியல் நாகரிகத்தை சீர்குலையச் செய்யும் தீய வழியில் மாற்றுக்கட்சியினர் துரித நடை போடுகின்றனர்! பரிதாபம்! அவர்கள் திருந்துவார்களா?

மாற்றுக்கட்சியினர் திருந்தினாலும் திருந்தாவிட்டாலும் தமிழக அரசியல் வரலாற்றில் அறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்துத்தந்துள்ள அரசியல் கண்ணியத்திலிருந்து சிறிதுகூட தவறாது கழகத்தினர் தங்களது கடமையாற்றி வருவர் என்பது உறுதி. வசைமாரிகளை மட்டுமே ஆயுதமாகக்கொண்டு எந்தக் கட்சியும் வாழ்ந்ததில்லை. மாறாக விலாசம் தெரியாமல் மறைந்துவிட்டன.

எனவே நமது வேண்டுகோளை ஆளும் கட்சியினரும், அவர்களுக்குத் துதிபாடும் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு, சிந்தித்துப் பார்த்து திருந்துவார்களானால் அக்கட்சிகளுக்கு எதிர்காலத்தில் ஓரளவாவது இடமிருக்கமுடியும். இல்லையெனில் மக்கள் மேலும் தக்க புத்திபுகட்டத்தான் செய்வார்கள் என்ற உறுதிப்பாடுடன் கழகத் தோழர்களாகிய நாம் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்துள்ள அறவழியில் நின்று கடமையாற்றுவோம்.

**தூற்றுவோர் தூற்றட்டும். அதை தூசென மதித்து நமது கடமையை இனிதே நிறைவேற்றுவோம்!**

**வெற்றி நமதே !**

1-ம் பக்கத் தொடர்ச்சி

தாவது.

பெ. நண் : எனக்குக்கூட வர வர காங்கிரஸ் பிடிக்கலீங்கய்யா !

பெ : எப்படிங்க பிடிக்கும். காந்தி பெயரையும், நேரு பெயரையும் இன்னும் எத்தனை காலத்துக்குச் 'சொல்லி இவங்க காலந் தள்ள முடியும். பாவம் அந்த மனுஷனுக்கும் உடல் நலன் சரியில்லே !

பெ. நண் : எந்த மனுஷனுங்க அய்யா !

பெரி : அவர்தானுங்க — நேரு! இன்னும் அவர் நீண்ட நாளா வாழட்டும் அதை மனதார வரவேற்கிறேன். ஆனால் அவர் சொல்லுக்கு காங்கிரஸ் மேலிடத்திலேயே வரவர மதிப்பு மரியாதை குறைந்து வருதே— அவர் சொல்லுக்கே மதிப்பு போயிட்டுதுன்னா, இந்த லால் பகதூர்—மொரார்ஜி — பட்டீல் —நந்தா இவங்களுக்கெல்லாம் நம்ம தமிழ் நாட்டிலேயிருக்கிற கடைசி காங்கிரஸ்காரன்கூட பயப்படமாட்டான், நான் சொல்றதை எழுதிவைச்சுக்குங்க. காங்கிரஸ் ராஜ்யம் என்பது இன்னும் மூன்று வருஷந்தான்! ஆமாம்!

பெ. நண் : அதற்குப்பிறகு எந்தக் கட்சி அய்யா அதிகாரத்துக்கு வரும் ?

பெரி : யார் கிட்டேயும் சொல்லாதீங்க. நமக்கு ரொம்பவேண்டியவர்னு சொல்லிவைக்கிறேன். நம்ம நாட்டைப் பொறுத்தவரை கண்ணீர்த்துளி கட்சிக்காரனுங்கதான் ஆட்சியைக கைப்பற்றுவானுங்க — எவனும் அசைக்க முடியாதுங்க !

பெ. நண் : நீங்க காங்கிரசைத் தீவிரமா ஆதரிச்சாங்கய்யா?

பெரி : இப்பமாத்திரம் ஆதரிக்காமலா போயிட்டேன். என்ன வாழுதாம் காங்கிரஸ் ! பதவி, பெர்மிட், லைசென்ஸ் இதற்கெல்லாம் ஆசைப்பட்டு காங்கிரஸ்லே சேர்ரவங்களாலே காங்கிரஸ் வாழுமா — நல்லா யோசித்துப்பாருங்க. ஏதோ கண்ணீர்த்துளிக் கட்சிக்காரனுங்க, பணம் சேர்த்துட்டானுங்க, மாடிவீடு கட்டிட்டானுங்கன்னு நம்ம பேசறமே, காங்கிரஸ்காரர்களெல்லாம் பொறக்கும்பொழுதே குபேரன் பரம்பரையாவா பொறந்துட்டாங்க! விட்டுத் தள்ளுங்க !

இன்னும் சொல்லப் போனால் ராஜாஜிக்கும் எனக்கும் இன்னும் எவ்வளவோ கடுமையான வேறுபாடுகளிருந்தாலும் அவர் காங்கிரசிலே முன்னேயிருந்தபோது அவர் சம்பாதியத்தை இழந்திருப்பாரே தவிர, காங்கிரஸ் பேரைச் சொல்லியா பிழைச்சாரு — வயிறு எரியுதுங்க. காங்கிரசாம்! வெங்காயமாம்! நாசமாப் போச்சு.

பெ. நண் : அய்யா ரொம்ப கோபட்றீங்க, நேரமாச்சுங்க, நான் இரவு வண்டிக்கு ஈரோடுக்கு போறனுங்க.

பெரி : போயிட்டு வாங்க — வணக்கம்.

—கூத்தரசன்


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
**வெண்சங்கு சீயக்காய்த் தூள்**
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
**செல்வம்ராணி ஊதுபத்திகளை**
உபயோகியுங்கள்.



தயாரிப்பாளர்கள் :
**வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி**
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# அண்ணா வளர்க்கும் அரசியல் நாகரிகம்!

**என். வி. என்.**

அரசியல் துறையில் கட்சிகளுக்கிடையே எவ்வளவு கடுமையான போட்டிகளும், வேறுபாடுகளுமிருப்பினும், அவைகளை மேடைகளில்—ஏடுகளில் எடுத்துக் காட்டுவதில், அதற்கேற்ப பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் தமிழ்நாடு தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்ந்து வந்திருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களில் அரசியல் துறையில் காணப்படும் வேறுபாடுகளின் காரணமாக சொற்போருக்குப் பதிலாக மற்போர் நடைபெற்று குறிப்பிட்ட சில மாநிலங்களின் மதிப்புக் குறைந்துவிட்டதை அரசியல் தொடர்புடையோர் அறிவர். என்றாலும் தென்னகத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் அரசியல் வேறுபாடுகளுக்காக கட்சிகளுக்கிடையே தரக்குறைவான போக்கும், விபரீதங்களும் ஏற்பட்டதில்லை யென்பதை பிற மாநிலத்தவர்களே ஒப்புக்கொள்வார்கள்.

அவ்வித சிறப்புப்பெற்றுள்ள தமிழகத்தின் அரசியல் மேடைகளில், ஏடுகளில் இழித்தனமும் தரக்குறைவும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் கண்டு மிக மிக வேதனைப்படுகிறேன். காங்கிரஸ் கட்சிக்கும், கழகத்திற்குமிடையே, அதுபோல மற்ற கட்சிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் கொள்கையளவிலேயல்லாது, தனிப்பட்ட விரோதங்களாலல்ல.

காங்கிரஸ் சார்பில் ஒருவர் கழகத்தை எதிர்த்து வேட்பாளராக நிறுத்தப்படுகிறாரென்றால், அவர் கழக சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்குத் தனித்த விரோதி யென்பதாலல்ல. அது போலத்தான் மற்ற கட்சிகளும்!

கட்சிகள், தங்கள் தங்கள் கொள்கைக்கு—திட்டத்திற்கு மக்களிடையே ஆதரவு தேடவும், தொடர்ந்து அத்திட்டங்களை நடைமுறையில் கொண்டுவர ஆட்சிபீடத்தில் அமரவும் வழிவகை தேடுவதற்கே தேர்தலில் ஈடுபடுகின்றனவே யல்லாது அந்தந்தக் கட்சிகளைச் சார்ந்தவர்களின் சொந்த விருப்பு வெறுப்பு ஆகியவைகளைத் தீர்த்துக்கொள்ளும் இழிச்செயலுக்காக அல்ல. அவ்வித போக்குடையோர் எந்தக் கட்சியிலிருந்தாலும் அவர்களால் அந்தக் கட்சிக்குச் சிறிதுகூட பயனோ பெருமையோ ஏற்படாது.

ஆக, அரசியல் துறையில் ஈடுபடும் ஒவ்வொரு கட்சியும் இந்த அடிப்படை நல்லெண்ணத்தையும், அரசியல் நாகரீகத்தையும் உணர்ந்து நடந்தால், அரசியல் மேடைகள், அரசியல் கட்சிகளின் ஏடுகள் வாயிலாக மக்கள் அரசியல் விவேகத்தையும் தெளிவையும் பெற துணை புரிவதாய் அமையும். ஆனால் கட்சிக்குக் கட்சி, கொள்கைககுக் கொள்கை மோதல் என்பதை மறந்து—கட்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களின் தனிப்பட்ட ஆசாபாசங்களை வெளிப்படுத்தி தங்களது விருப்பு—வெறுப்புகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று முனைவார்களானால், அதற்குக் கட்சிகளும் இடமளித்துவிட்டால், மக்கள் அரசியல் தெளிவுபெற முடியாதவர்களாகிவிடுகிறார்கள் என்பதுமட்டுமல்லாமல், அவ்விடத்திய அரசியல் தரக்குறைவானதாக மாறி சம்பந்தப்பட்ட மாநிலத்துக்கே கேடுபயக்க நேரிடும்.

அந்த அபாய நிலைக்கு தமிழகத்தை இழுத்துச்செல்ல சில அரசியல் கட்சிகளின் மேடைகளும் ஏடுகளும் துடியாய்த் துடிக்கின்றன. தெரிந்தோ தெரியாமலோ ஆளுங்கட்சியினர் இந்த விபரீத விளையாட்டுக்குத் துணைபுரிந்து நிற்பது வெட்கமும் வேதனையும் படக்கூடிய ஒன்றாகும்.

பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள மிகப்பெரிய தலைவர்களானாலும் தொண்டர்களானாலும் தங்களையும் அறியாமல் ஏதாவது ஒரு சிறு தவறுக்காவது தங்கள் வாழ்க்கையில் இலக்காகியிருக்கும் நிலைதான் ஏற்பட்டிருக்கும். இந்த உண்மையை பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் மனசாட்சியுடன் தங்களுக்குத் தாங்களே கேட்டுப்பார்த்தால் சரியான பதில் கிடைக்கும்.

காந்தியடிகளைப் போன்றவர்கள்கூட இவ்வித சிறு தவறுக்குத் தாம் ஆளாகிவிட்டதைப்பற்றி வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள். எனவே அரசியல் துறையில் ஈடுபடுவோர், தனிப்பட்ட குறைபாடுகளை வாதப் பிரதிவாதமாக எடுத்துவைத்து விவாதிப்பதால் மக்களுக்கு நன்மை பயக்குமா என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டுகிறோம்.

இவ்வாறு நாம் கூறுவதால் அரசியல் துறையில் ஈடுபாடுகொள்வோர் எவ்வித குறைபாடுடையவர்களாயினும் அதைப் பற்றிக் கேட்கக்கூடாதா? அல்லது அந்தக் குறைபாடுகள் வளராமல் தடுப்பது எப்படி என்று கேட்கலாம். நிச்சயமாக அந்தக் குறைபாடுகள் களையப்படவேண்டுந்தான். அதில் சிறிதுகூட நமக்கு அபிப்ராய பேதமில்லை. ஆனால் அவைகளைத் தீர்ப்பதற்கான முறைகள் பொதுமேடையல்ல. அந்தந்தக் கட்சிகளின் உள்விவகாரமாக இது கருதப்பட்டு அந்த அடிப்படையில் சம்பந்தப்பட்ட கட்சிகளால் ஆவன செய்யவேண்டும்.

அடுத்தபடியாக குறிப்பிட்டஒரு கட்சியைச் சார்ந்த குறிப்பிட்ட ஒருவர் மீதோ அல்லது சிலர் மீதோ எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் தனிப்பட்ட குறைகளை எடுத்துக் கூறி கண்டிக்க வருகிறார்களென்றால், குறைகளை எடுத்துக் கூறுபவர் முதலாவதாக அப்பழுக்கற்ற யோக்கியர்தானா என்பதை நடுநிலையில் நின்று தனக்குத்தானே எண்ணிப் பார்த்தால் பிறரது தனிப்பட்ட குறைகளை மேடைகளில் எடுத்துக்கூற எவரும் முன் வரமாட்டார்கள். ஆனால் இன்று தி. மு. கழகத்திற்கு எதிரான கட்சிகளின் பிரச்சார மேடைகளில் கழகத்தைச் சார்ந்தவர்களையும் அதன் தலைவர்களையும் எவ்வளவு தரக்குறைவான முறையில் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசி வருகிறார்கள் என்பதை சென்னை மாநகர மக்களும் பொதுவாக தமிழக மக்களும் நன்கு அறிந்ததாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் கூறவேண்டுமானால் காங்கிரஸ் கட்சியையோ அல்லது அதற்குத் தோழமையான கட்சிகளையோ அக்கட்சிகளைச் சார்ந்த தலைவர்களையோ கொள்கை அடிப்படையில் அல்லது கட்சி அடிப்படையில் கடுமையாகத் தாக்கியிருக்குமேயல்லாது அவர்களது தனிப்பட்ட விவகாரங்களை வைத்துப் பேசுவதைக் கட்சி அனுமதித்ததில்லை. கழகத்தினர் யாராகிலும் கட்சி அடிப்படையில் தீவிரமாக எதிர்த்துப் பேசும்போது உணர்ச்சி வயப்பட்டு கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்துவிட்டால், கழகத் தலைவர் அண்ணா அவர்கள் கண்டிக்காமலிருந்ததில்லை. ஆனால் அவ்வித அரசியல் பண்பாடு ஆளுங்கட்சியிடம் குறைந்து வருவது மிகமிக வருந்தத்தக்கதாகும். அவ்வித பிரச்சாரத்தினால் கழகத்தின் வளர்ச்சியை சிறிதாவது அசைத்துவிட முடியுமா வென்றால், திட்டவட்டமாக முடியாது என்று கூறிடலாம். அதனால் ஆளுங் கட்சிதான் சிறிது சிறிதாக மதிப்பு குறைந்து மக்களின் நம்பிக்கையையும் இழந்து வருகிறது.

ஆளும் கட்சியின் தலைவர்கள் வரட்டு கௌரவத்தைமறந்து மனதார சிந்தித்துப்பார்ப்பார்களானால் நாம் எடுத்துக்காட்டும் உண்மை அவர்களுக்கு விளங்கும்.

அண்மையில் நடைபெற்ற நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்களில் கழகம் தனது வளர்ச்சிக்கேற்ப வெற்றிகளைப் பெற்றிருக்கிறது என்பது வெளிப்படையான உண்மை தானென்றாலும் காங்கிரஸ் கூட்டணி மேடைகளில் கழகத் தோழர்களின்மீது ஏவப்பட்ட வசைமாரியும் ஒரு காரணமாகும்.

காங்கிரஸ் — கம்யூனிஸ்டு—த. தே. க. கூட்டணியினர் கழகத் தோழர்கள் மீது பிரயோகித்த மிகக் கேவலமான பிரச்சாரங்களை மக்கள் நம்பி யிருப்பார்களானால் கழகத்திற்கு வெற்றியேற்பட்டிருக்க முடியாது. காங்கிரஸ் கூட்டணியின் தரக்குறைவான-தனிப்பட்ட வசைமாரிகளை மக்கள் அறவே பொருட்படுத்தவில்லை. அவர்களது பிரச்சாரத்தில் உண்மையிருக்கிறதா இல்லையா என்பதைவிட முதலில் சராசரி மனிதாபிமானமாகிலும் இருக்கிறதா என்பதையே மக்கள் ஆராயத் தொடங்கினர்.

அந்த ஆராய்ச்சியின் முடிவுதான் கழகம் பெற்ற மகத்தான வெற்றியும் காங்கிரசுக்கு ஏற்பட்ட பெருந் தோல்வியுமாகும். இதிலிருந்தாவது காங்கிரஸ் தலைவர்கள் தக்க பாடம் பெற்றுத் திருந்தியிருக்க வேண்டும்.

திருந்தினார்களா ?

தேர்தல் முடிவுக்குப் பிறகும் "தேசிய முற்போக்கு அணி" என்ற போர்வையில் கம்யூனிஸ்டு—த. தே. க., ஆகியவைகளுடன் காங்கிரஸ் பிரசங்கிகளும் பங்கு கொண்டு தி. மு. கழகத்தின் மீது வசை புராணம் பாடுவதில் முனைந்துள்ளனர்.

கம்யூனிஸ்டை பொறுத்தவரை இதற்கு முன்பு சேர்ந்த 'கூட்டுகள்' அனைத்தும் எதிர்க்கட்சிகளோடு இணைந்த கூட்டுகளாயிருந்து வந்தன. ஆனால் இப்போது சில காலமாகக் கொண்டு வரும் கூட்டு ஆளுங்கட்சியினருக்குப் பாத பூசை செய்யும் போக்கில் அமைந்த கூட்டாகும்"

ஆளுங் கட்சியினர் செய்யும் தவறை எடுத்துக் கூறுவதற்கு எதிர்க்கட்சிகள் தேர்தல் காலங்களிலோ அல்லது முக்கிய சந்தர்ப்பங்களிலோ கூட்டு சேருவது அரசியல் நாகரிகமாகும். எதிர்க்கட்சிகளின் கூட்டில் சேர இயலாத ஒரு எதிர்க்கட்சி, தனித்து நின்று தனது எதிர்ப்பைக் காட்டுமேயல்லாது நேர்மாறாக ஆளுங்

(7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1